Powered by

ANNUAL HISTORY PRIZES

Awards Ceremony & The Dr. S. L. Bhyrappa Memorial Lecture

மாண்புமிகு திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் ஆற்றிய டாக்டர் எஸ். எல். பைரப்பா நினைவுச் சொற்பொழிவு (தொடக்கச் சொற்பொழிவு)

வணக்கம். விக்ரம்சம்பத் அவர்களே, இராஜலட்சுமி அவர்களே, தேவேஷ்வர்மா அவர்களே மற்றும் இங்கு கூடியிருக்கும் மிகுந்த ஆர்வம் கொண்ட மதிப்பிற்குரிய பார்வையாளர்களே.

எனக்கு இந்த வாய்ப்பை வழங்கியமைக்கு நன்றி. எனக்குத்தெரிந்தவரை, கடந்த 12-13 ஆண்டுகளாக விக்ரம் அவர்கள் இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து நடத்துவதற்காக மிகவும் தீவிரமாகவும், முழு ஈடுபாட்டுடனும், அர்ப்பணிப்புடனும் ஆற்றியிருக்கும் அமைப்பு ரீதியான பணிகளை என்னால் காண முடிகிறது.மேலும், இன்று பல்வேறு பிரிவுகளில் விருதுகளைப் பெற்றுள்ள அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னைக்கேட்டால், இந்த முயற்சி தொடங்குவதற்குச் சற்றுத் தாமதமாகிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். அதற்காக விக்ரமின் முயற்சியைக் குறைத்து மதிப்பிடுவதாக அர்த்தமில்லை. உண்மையில், இந்தியாவுக்கு இப்படிப்பட்ட ஒரு முயற்சி குறைந்தது நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே தேவைப்பட்டது. ஆனால், கடந்த நாற்பது, ஐம்பது ஆண்டுகளாக இப்படிப்பட்ட முயற்சிகளை நாம் மேற்கொள்ளத் தவறிவிட்டோம். அதன் விளைவாக, நமது வரலாற்றையோ அல்லது நமது சமூக வாழ்க்கையையோ முற்றிலும் மாறுபட்ட, உண்மைக்குப் புறம்பான ஒரு விதத்தில் எடுத்துச் சொல்வதிலும், பரப்புவதிலும் நமது எதிராளிகளை அதிக சக்தி வாய்ந்தவர்களாக மாற்றியுள்ளது. நான் தொடர்ந்து பேசும்போது, இதைப் பற்றியும் ஓரளவு குறிப்பிடுகிறேன்.

இன்று சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்தநாள். - இந்தியா இந்த நாளைத்தான் ஆசிரியர் தினமாகக் கொண்டாடுகிறது. அதே நேரத்தில் நாம் குரு பூர்ணிமாவையும் நமது ஆசிரியர் தினமாகக் கொண்டாடுகிறோம். தன்னுடைய ஆழ்ந்த புலமைக்காகவும், இந்தியாவின் வேத மரபுகள் மீது கொண்டிருந்த விரிவான புரிதலுக்காகவும் ராதாகிருஷ்ணன் அவர்கள் செப்டம்பர் 5-ஆம் தேதி நிச்சயமாக நினைவுகூரப்படுவார். மேலும் இந்தியாவின் மதச்சார்பற்ற வரலாறு அதுவும் ஆசிரியர் தினம் என்றே நமக்குக் கூறுகிறது, எனவே ஆசிரியர்களை எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் வழிபடலாம் – குரு பூர்ணிமா அன்றும், செப்டம்பர் 5-ஆம் தேதியும் அவர்களைப் போற்றுகிறோம். அப்படிப்பட்ட ஒரு சிறப்பான நாளில், நம் தலைமுறைக்கும், வரவிருக்கும் தலைமுறைக்கும் – அது ஜென் இசட் (Gen Z) ஆக இருந்தாலும் சரி, ஜென் ஆல்பா (Gen Alpha) ஆக இருந்தாலும் சரி – மிகவும் முக்கியமான பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்கு இன்று காலை உங்கள் முன்னிலையில் நிற்பதை ஒரு பாக்கியமாகவே கருதுகிறேன்.

டெல்லியில் ஒருமழைக்கால நாளில் இதைப் பற்றி விவாதிப்பதற்கான வாய்ப்பை உருவாக்கியதற்காக விக்ரமிற்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விக்ரம் செய்துள்ள அனைத்து சிறந்த பணிகளையும் கேட்பதற்கு இன்னும் ஏராளமான மக்கள் இங்கு வந்திருப்பார்கள் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. ஆனால் சிந்தனையாளரையும் ஆசிரியர்களையும் பிரிக்கமுடியாது, எனவே நாம் இருவரையும் வணங்குகிறோம். மேலும் நான் நினைவுச் சொற்பொழிவில் டாக்டர் பைரப்பா அவர்களைப் பற்றி மீண்டும் பேசுவதற்கு முன், இன்று வழங்கப்படும் விருதுகளையும், அவற்றுக்குச் சூட்டப்பட்டுள்ள பெயர்களையும் பற்றி குறிப்பாகச் சொல்ல வேண்டும். ஆர்.சி. மஜும்தார்,

எஸ்.எல். பைரப்பா அல்லது அனந்த்பை என யாராக இருந்தாலும், இந்த மூன்று மாபெரும் நாயகர்களும் அந்த உணர்வை உயிர்ப்புடன் வைத்திருந்தனர்.

இந்த விருதுகளுக்குச் சூட்டப்பட்டுள்ள பெயர்களைத் தேர்ந்தெடுத்திருப்பதே, இந்தியச் சமூகமும் வரலாற்றை வடிவமைத்த அறிவுஜீவிகளும் எத்தனை மாபெரும் ஆளுமைகளை இதுவரை கவனிக்காமல் விட்டிருக்கிறார்கள் என்பதை நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. நமது வரலாற்றுப் புத்தகங்களில் என்ன இடம்பெற வேண்டும், நமது நாளிதழ்களில் என்ன வெளிவர வேண்டும், நமது பண்பாட்டு அமைப்புகளில் எத்தகைய கருத்துகள் இடம்பெற வேண்டும் என்பதையெல்லாம் தீர்மானித்தவர்களும் அவர்களைப் புறக்கணித்திருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட ஆளுமைகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் பெயர்களில் விருதுகளை வழங்குவது என்பதே மிகவும் பாராட்டத்தக்க ஒரு முயற்சி. விக்ரம் அவர்களே, இந்தப் பணியை முன்னெடுத்ததற்காக உங்களை மனதாரப் பாராட்டுகிறேன். மேலும், இந்தியா இன்று எஸ். எல். பைரப்பா அவர்களை ஒரு தலைசிறந்த நாவலாசிரியராகவும், நமக்கு ஒரு பாதையைச் சுட்டிக்காட்டிய சிந்தனையாளராகவும் கொண்டாடுவது மிகவும் அர்த்தமுள்ளதாக இருக்கிறது. ஏனென்றால், அவர் பின்பற்றிய பாதையில் பயணிப்பவர்களுக்கு இந்தியாவில் தொடர்ந்து பல்வேறு தடைகள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில்தான் அவர் அந்தப் பாதையை நமக்குக் காட்டினார்.

அவருடைய முனைவர் பட்ட ஆய்வின் தலைப்பே அவருடைய ஒட்டுமொத்த வாழ்க்கைப் பயணத்தையும் வரையறுப்பதாக அமைந்தது – “சத்ய மத்து சௌந்தர்யா”, அதாவது “உண்மையும் அழகும்”. இந்த ஆய்வு 1966-ஆம் ஆண்டு பரோடாவில் உள்ள மகாராஜா சாயாஜிராவ் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அவருடைய அறிவியல் மற்றும் கல்விப் பயணம் அவ்வளவு எளிமையானதாக அமையவில்லை; அது மிகவும் கடினமான பாதையாக இருந்தது. தனது சுயசரிதையான பித்தியில், பைரப்பா அவர்கள் தன்னுடைய இளமைக்கால வாழ்க்கையைப் பற்றிப் பதிவு செய்கிறார். கடுமையான வறுமை, சிறுவயதிலேயே தாயை இழந்தது, நிலையற்ற குடும்பச் சூழல், மற்றும் பிளேக் நோயின்போது உடன்பிறப்புகளையும் உறவினர்களையும் இழந்தது என, அவருடைய

குழந்தைப் பருவம் சொல்லொணாத துயரங்களால் நிறைந்திருந்தது. அது எவ்வளவு கடினமான வாழ்க்கையாக இருந்திருக்கும் என்பதை வார்த்தைகளால் விவரிக்கவே முடியாது.

அதனால், அவருடைய வாழ்க்கையின் வெவ்வேறு காலகட்டங்களில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்த உறவினர்களின் அரவணைப்பில்தான் அவர் வளர்ந்தார். அவர் பல இன்னல்களுக்கு இடையே தனது கல்வியைத் தொடர்ந்தார். அவர் நேரடியாக உணர்ந்து வாழ்ந்த இந்த வாழ்க்கை அனுபவங்கள்தான், அவரது எழுத்துக்கு ஆழத்தையும் முதிர்ச்சியையும் கொடுத்தன. ஆனால், இந்த அனுபவங்கள் அவருக்குள் எந்தக் கசப்பையும் உருவாக்கவில்லை. அவரது எழுத்தின் முக்கியமான பண்புகளில் ஒன்று கட்டுப்பாடு; உணர்ச்சிகளை மிகைப்படுத்தாமல், வாழ்க்கையை உள்ளது உள்ளபடியே வெளிப்படுத்தும் யதார்த்தவாதம் அவரது எழுத்தில் இருந்தது. அவர் வாழ்ந்து பெற்ற இந்த அனுபவங்களுக்கு இணையாக, ஒரு விஷயத்தைப் பற்றி எழுதுவதற்கு முன்பு அதை ஆழமாக அறிந்து கொள்வதற்கான அசாதாரணமான அளவிலான தயாரிப்பையும் அவர் மேற்கொண்டார். ஒரு விஷயத்தைப் பற்றி எழுதுவதற்கு முன்பு, அந்த உலகத்திற்குள் தானே சென்று, அதை நேரடியாகப் புரிந்துகொள்ள முயற்சி செய்யாமல் பைரப்பா அவர்கள் எழுதமாட்டார். அவருடைய முக்கியமான நாவலான மந்த்ரா, கர்நாடக இசைக் கலைஞர்களின் உலகத்தைப் பற்றியது. அந்த நாவலை எழுதுவதற்கு முன்பு, அவர் தானே கர்நாடக இசையைக் கற்றுக்கொண்டார். நீண்ட காலம் பாடகர்களுடன் நெருக்கமாக இருந்து, அவர்களின் வாழ்க்கையையும் இசை உலகையும் நேரடியாகப் புரிந்துகொண்டார். இங்கே விக்ரம் அவர்களும் இசை மற்றும் இசைக் கலைஞர்கள் தொடர்பாகப் பணியாற்றிக் கொண்டிருப்பதை நினைவுகூர்கிறேன்.

எனவே, தான் அவர் அதைப் பற்றி எழுதுவதற்கு முன்பாகவே அந்த அனுபவத்தைத் தாமே வாழ்ந்து உணர விரும்பினார். அதனால்தான், அவர் அதைப்பற்றி எழுதியபோது, அதில் அவ்வளவு உண்மைத்தன்மையும், இயல்பான நம்பகத்தன்மையும் வெளிப்பட்டன; அவர் எழுதிய ஒவ்வொரு வார்த்தையிலும் அந்த அனுபவத்தை நேரடியாக உணர முடிந்தது. அதனால், அவர் பாடகர்களுடன் தங்கி, நீண்ட காலம் அவர்களுடனே வாழ்ந்தார். அந்த உலகத்தின் கலை மற்றும் அதன் பின்னணியில் இருக்கும் வாழ்க்கையை அவர்களின் இலட்சியம், ஒழுக்கம், பாதுகாப்பின்மை உணர்வு, அத்துடன் அந்த உலகிற்குள் நிலவும் சிக்கலான உறவுகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள அவர் விரும்பினார். அவர் எழுதிய மற்றொரு படைப்பான 'பர்வா'வுக்காக, குருக்ஷேத்திரம், ஹஸ்தினாபுரம் உள்ளிட்ட மகாபாரதத்துடன் தொடர்புடைய இடங்களுக்குப் பயணம் செய்தார். மேலும், சகோதரர◌்களுக்கு இடையிலான பல கணவர் முறை அண்மைக்காலம் வரை நீடித்திருந்த இமயமலைப் பகுதிச் சமூகங்கள் குறித்தும் அவர் ஆய்வு செய்தார்.

அவர் மகாபாரதத்தை எழுதியிருக்கலாம்; அதற்கான அனைத்து இரண்டாம் நிலை ஆதாரங்கள் அனைத்தையும் படித்திருக்கலாம்; மேலும், இந்தியாவில் ஏற்கனவே பல்வேறு மொழிகளில் எழுதப்பட்டிருந்த மகாபாரதத்தின் வெவ்வேறு வடிவங்களை ஆய்வு செய்திருக்கலாம். ஆனால், அவர் அவ்வாறு செய்யவில்லை. அவர் அந்த இடங்களுக்கே நேரடியாகச் சென்றார். அந்த மக்களுடன் இணைந்து வாழ்ந்து, அந்தச் சூழலின் உண்மையான உணர்வைப் பெற விரும்பினார். தன் வாசகர்களோடு உண்மையாகத் தொடர்புகொள்ள விரும்பும் ஒரு எழுத்தாளர் மேற்கொள்ளும் முயற்சிகளின் எல்லை மற்றும் அவர் அனுபவிக்கும் வலிகள், உண்மையில், ஒரு புத்தகம் அவரைப் பற்றி வெளிப்படுத்துவதைவிட, அதைவிட அதிகமாகவே அவை அந்த எழுத்தாளரைப் பற்றி நமக்குத் தெரிவிக்கின்றன. ஆகவே பைரப்பா அப்படிப்பட்ட பின்னணியில் இருந்து வந்தவர். அதனால், இத்தகைய குடும்பங்களும் குடும்ப அமைப்புகளும் அன்பு, கடமை, பொறாமை, அதேபோல் நெருக்கம் ஆகியவற்றை எவ்வாறு மற்றும் எந்த அளவுக்கு வடிவமைக்கும் என்று அவரைக் கேட்கத் தூண்டியது.

எனவே, அவர் முதலில் அந்த உலகத்திற்குள் தாமே நுழைந்து, அதை அனுபவித்தார்; அதன் பின்னரே அதை நமக்காக மீண்டும் உருவாக்கினார். இந்த ஆழ்ந்த ஈடுபாடுதான் அவரது படைப்புகளின் மிகப்பெரிய வலிமைகளில் ஒன்றை நமக்கு விளக்குகிறது: மனித உறவுகளை அவர் சித்தரிக்கும் நுட்பம். அவரது கதாபாத்திரங்கள் ஒருபோதும் கருத்தியல் அடிப்படையில் வடிவமைக்கப்படவில்லை. நெருக்கடியான சூழ்நிலைகளின் கீழ் மக்கள் எவ்வாறு எதிர்வினையாற்றுகிறார்கள், கடமையும் ஆசையும் எவ்வாறு ஒன்றோடொன்று மோதுகின்றன, உணர்வில் ஏற்படும் ஒரு சிறிய மாற்றம் கூட ஓர் ஒட்டுமொத்த உறவையே எவ்வாறு மாற்றிவிடக்கூடும் என்பதைக் காண்கிறோம். வாசகர் வெறுமனே கதையைப் பின்தொடர்வதில்லை; அந்தக் கதையின் உள்ளேயே தாம் இருப்பதைப் போன்ற உணர்வைப் பெறுகிறார். எனவே, இந்த அணுகுமுறைக்குப் பின்னால் இலக்கியத்தைப்

பற்றிய ஒரு தெளிவான தத்துவம் இருந்தது. 'நானேகே பரேயுத்தேனே' நான் ஏன் எழுதுகிறேன்? என்ற தனது புத்தகத்தில்... இலக்கியம் என்பது இடதுசாரியாகவோ, வலதுசாரியாகவோ அல்லது வேறு எந்தவொரு 'இசத்தின்' கருவியாகவோ அல்லது சமூக முன்னேற்றத்திற்கான ஒரு குறிப்பிட்ட திட்டத்தின் ஊடகமாகவோ மாற வேண்டும் என்ற கருத்தை பைரப்பா நிராகரித்தார்.

எனவே, பரதரின் நாட்டிய சாஸ்திரத்தை மேற்கோள் காட்டி, இலக்கியம் வாசகரை ரசம் எனப்படும் உணர்வுலகிற்குள் ஆழமாக அழைத்துச் செல்ல வேண்டும் என்று அவர் வாதிட்டார். வியப்பு, துயரம், வீரம், மென்மை மற்றும் மனித உணர்ச்சிகளின் முழுமையான வீச்சையும் நாம் நவரசம் என்று அழைப்பதையும் வாசகர் அனுபவிக்க வேண்டும். அதன் பணி அனுபவத்தை ஆழப்படுத்துவதும் உணர்திறனைச் செம்மைப்படுத்துவதும் ஆகும். ஒரு குறிப்பிட்ட அரசியல் முடிவை வாசகர் மீது திணிப்பது அல்ல. அதனால்தான் அவரது நாவல்கள் செயற்கையாக உருவாக்கப்பட்டவை போல அல்லாமல், வாழ்ந்து அனுபவிக்கப்பட்டவை போலத் தோன்றுகின்றன. டாக்டர் பைரப்பா முதன்முதலில் எனது மனதிற்குள் எவ்வாறு நுழைந்தார்என்பது குறித்து ஒரு தனிப்பட்ட நினைவைப் பகிர்ந்துகொள்ள அனுமதியுங்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு, வம்சவிருட்சம் நாடகமாக அரங்கேற்றப்பட்டதை நான் பார்த்தேன். அது ஒரு தொழில்முறை சாரா ஒரு நாடகக் குழுவாக இருந்தாலும், அவர்கள் அந்தப் படைப்பை நாடகமாக நிகழ்த்தினர். பார்வையாளர்களில் ஒருவராக அமர்ந்து, மரபுக்கும் கடமைக்கும் இடையே போராடிக்கொண்டிருந்த அந்தக் கதாபாத்திரங்களைப் பார்த்தபோது, அந்த நடிப்பின் தாக்கம் என் மனதை விட்டு நீங்காமல் நிலைத்துவிட்டது. இது தமிழ்நாட்டிலுள்ள திருச்சியில் நடந்தது.

நான் இதை இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம், என் நினைவில் அந்த மேடை என்பது வெறுமனே ஒரு களம் மட்டுமல்ல; இன்று நான் உங்கள் முன் வைக்க விரும்பும் கருத்தின் மைய உருவகமாகவும் அது விளங்குகிறது.டாக்டர் பைரப்பாவின் இலக்கியப் பயணத்தை நாம் பார்க்கும்போது, சுமார் 15 ஆண்டுகள் இடைவெளியில் இரண்டு தனித்துவமான சிகரங்களை அவர் எட்டியிருப்பதைக் காணலாம். 1965 முதல் 1979 வரையிலான கலைசார்ந்த சிகரம். வம்ஷவ்ருக்ஷா', 'கிருஹபங்கா', மற்றும் 1975-இல் அவருக்கு சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றுத் தந்த 'காட்டு', இறுதியாக 'பர்வா' போன்ற மாபெரும் படைப்புகளின் காலம் அது.இரண்டாவது, முன்னெப்போதும் இல்லாத அளவிலான மக்கள் வரவேற்பைப் பெற்ற உச்சநிலை. இது சுமார் 2007-ஆம் ஆண்டில் தொடங்கியது. அப்போது அவரது 'ஆவரணா' நாவல் வெளியீட்டிற்கு முன்பே முழுமையாக விற்றுத் தீர்ந்ததுடன், மற்றும் ஐந்து மாதங்களில் 10 மறுபதிப்புகளைக் கண்டது . இது இந்தியப் பதிப்புலகில் ஒரு சாதனையாக அமைந்தது. அதே நேரத்தில் 'பர்வா' 19 பதிப்புகளை எட்டியுள்ளது.

அவரது ஆறு நாவல்கள், இந்தியத் திரையுலகின் முன்னணி படைப்பாளர்களால் திரைப்படங்களாகத் மாற்றப்பட்டன. வம்சவிருட்சம் திரைப்படம் 1971-ஆம் ஆண்டு கிரிஷ் கர்னாடுக்கு தேசிய விருதைப் பெற்றுத் தந்தது; அதேபோல், கிரிஷ் காசரவள்ளி 'நாயி நெரலு' நாவலைத் திரைப்படமாக உருவாக்கினார்.ஆனால், இங்கே ஒரு குறிப்பிடத்தக்க முரண்பாடு உள்ளது: பைரப்பாவின் படைப்புகளைத் திரைப்படமாகத் உருவாக்கி, அதற்காகத் தேசிய அளவில் பாராட்டுகளையும் விருதுகளையும் பெற்ற இந்த முன்னணி படைப்பாளர்களே, பின்னர் அவருக்கு எதிராகக் கடுமையான விமர்சனப் போக்கை மேற்கொண்டவர்களுள் இடம்பெற்றனர். அவரது நேர்மையே அவரை ஒரு வரையறைக்குள் அடைத்துவிட்டது. ஏன் அவர் இவ்வாறு ஒரு வட்டத்திற்குள் அடைக்கப்பட்டார்? அதற்கும் அவரது இலக்கியத் திறனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. மாறாக, அவரது சிந்தனையிலும் அதை வெளிப்படுத்திய விதத்திலும் அவர் காட்டிய நேர்மையே அதற்குக் காரணமாக இருந்தது.

திப்பு சுல்தான் போன்ற சிக்கலான வரலாற்று ஆளுமைகளைப் பற்றி எழுதும்போது, சமகால அரசியல் வசதிக்கேற்ப வரலாற்று ஆவணங்களில் கிடைக்கும் உண்மைகளைத் தளர்த்திக்கொள்ள அவர் மறுத்தார். தனது 91 -ஆம் வயதில், அவர் தனது முடிவுகளை மிகத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்: “திப்பு மூலத குரூரி” அதாவது, திப்பு அடிப்படையில் ஒரு கொடூரமான மனிதர் என்று குறிப்பிட்டார். மேலும், "திப்புவன்னு ஹீரோ மாடிகொண்டு பருத்தாரே" அதாவது, அவர்கள் திப்புவை ஒரு ஹீரோவாக மாற்றிக்கொண்டே இருக்கிறார்கள் என்பதும் பைரப்பாவின் கருத்தாகும். வரலாற்று ஆவணங்களில் தாம் கண்டறிந்தவற்றை உள்ளது உள்ளபடியே கூறுவதிலும், அவற்றை வெளிப்படுத்துவதிலும் அவர் கடைப்பிடித்த இத்தகைய அறிவார்ந்த நேர்மையே அவரை ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் அடைத்ததற்குக் காரணமாக அமைந்தது.

அவரை ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்தவராக முத்திரை குத்துவது அனைவருக்கும் வசதியாக இருந்தது. “ஓ, அவர் வேறொரு வரலாற்றைக் கொண்டுவர விரும்புகிற வகையைச் சேர்ந்தவர்; ஆனால் நாங்கள் உங்களுக்குச் சொல்ல விரும்பும் வரலாறு இதுதான்: இதை ஏற்றுக்கொள்ளுங்கள் அல்லது விட்டுவிடுங்கள். ஆனால், மாற்று வரலாற்றுக்கு நாங்கள் இடம் தரமாட்டோம்" என்று அவரை ஒரு குறிப்பிட்ட பிரிவுக்குள் தள்ளுவது அனைவருக்கும் வசதியாக இருந்தது. அந்த மாற்று வரலாறு என்பது உண்மையில் வேறொரு வரலாறு அல்ல; அதுதான் உண்மை. இந்த வார்த்தைகள் என்னுடையவை அல்ல. பைரப்பா 2022 நவம்பர் 14-ஆம் தேதி மைசூரில் இதைத் தெரிவித்தார். அந்த விவரங்களை நீங்கள் நிச்சயமாகப் பெற முடியும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன், திப்பு நிஜ கனசுகளுஎன்ற நாடகத்தின் வெளியீட்டு நிகழ்வில் அவர் இதைக் கூறினார். அடிப்படையில் ஆவணக் காப்பக ஆராய்ச்சியின் அறிக்கையாக இருந்த ஒன்று, அரசியல் ரீதியான கடுமையான தாக்குதலாக விமர்சிக்கப்பட்டது.

இருப்பினும், தனது படைப்பின் எல்லை எது என்பதில் அவர் எப்போதும் தெளிவாக இருந்தார்.

"பரேயுவுடு நன்ன மாத்யமா, நானு பரேயுத்தேனே, பெங்கி ஹாகுவுதில்லா" என்று அவர் கன்னடத்தில் கூறினார். அதாவது: “எழுதுவதுதான் எனது ஊடகம். நான் எழுதுகிறேன்; பொருட்களைத் தீயிட்டுக் கொளுத்துவதில்லை.” இந்தக் கருத்தை அவர் 2018 ஜனவரி 19 - ஆம் தேதி நடைபெற்ற நிருபதுங்கா விருது ஏற்புரையில் தெரிவித்தார். எனவே, டாக்டர் பைரப்பா ஒருபோதும் மௌனமாக்கப்பட்டு ஒடுக்கப்படவில்லை. ஆனால், நிறுவன ரீதியான மதிப்பீடு மற்றும் தரவரிசை என்ற நிலையில் அவரைத் தடுக்கும் முயற்சிகள் நடந்தன. கர்நாடகத்தில் நவ்யா இயக்கத்திற்கு வித்திட்ட யு. ஆர். அனந்தமூர்த்தி, பைரப்பாவை ஒரு நாவலாசிரியர் என்பதை விட விவாதம் செய்பவர் மட்டுமே என நிராகரித்தார். 2007 மே மாதத்தில், பைரப்பாவால் வெறும் விவாதம் மட்டுமே செய்ய முடியும், ஒரு நாவலாசிரியராக அவரால் எழுத முடியாது என்று கூறி அனந்தமூர்த்தி அவரைத் தாழ்த்திப் பேச நினைத்தார்.

கன்னட சாகித்திய பரிஷத்தின் அன்றைய தலைவராக இருந்த சந்திரசேகர பாட்டீல், 'ஆவரணா' நாவலை மிகவும் இழிவுபடுத்தும் வகையில் விமர்சித்தார். பைரப்பா வாசிக்கும் பொதுமக்களால் கொண்டாடப்பட்டாரே தவிர, நிறுவன ரீதியான அதிகார அமைப்புகளால் அங்கீகரிக்கப்படவில்லை. ஆனாலும், நிலைபெற்ற அந்த அதிகாரக் கட்டமைப்பு அவரைத் தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கியப் பிரமுகர்களுக்கு இணையாக வரிசைப்படுத்த மறுத்துவிட்டது. அவரை மிகக் கடுமையாக விமர்சித்த விமர்சகர்கள் ஞானபீட விருதுகளைப் பெற்றார்கள்; ஆனால் பைரப்பாவிற்கு அது ஒருபோதும் கிடைக்கவில்லை. இது நமது தேசிய மற்றும் அறிவுசார் விவாதங்களின் சொற்களஞ்சியத்தில் இருக்கும் அடிப்படை சிதைவை நேரடியாகச் சுட்டிக்காட்டுகிறது. வழக்கமான அரசியல் சொற்பொழிவுகளில், நாம் பல்வேறு பிரிவுகளைப் பற்றி எளிதாகப் பேசுகிறோம். பழமைவாதத் தாராளவாதி 'கன்சர்வேடிவ் லிபரல்', தாராளவாதத் தாராளவாதி 'லிபரல் லிபரல்', மற்றும் தீவிரவாதத் தாராளவாதி 'தீவிரவாத லிபரல்' போன்ற சொற்களை நாம் கேட்கிறோம். மனிதர்களை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அல்லது வட்டத்திற்குள் அடைப்பதற்காகவே இத்தகைய பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

ஆனால், நவீன இந்தியாவில் நிலைமையைப் பாருங்கள்; இந்த அளவுகோல் எவ்வாறு தன்னிச்சையாக ஒருதலைப்பட்சமாக அமைக்கப்படுகிறது என்பதைக் கவனியுங்கள். ஆவணங்களால் உறுதிப்படுத்தப்பட்ட வரலாற்று உண்மைகளை முன்வைக்கும் ஓர் இந்தியப் பழமைவாதத் தாராளவாதி, உடனடியாக “தீவிர வலதுசாரி” என்று முத்திரையிடப்படுகிறார். கவனியுங்கள். ஒரு புறநிலையான, நேர்மையான, உண்மைகளின் அடிப்படையில் செயல்படும் அறிஞர் ஒருபோதும் நடுநிலையான இடத்தைப் பிடிக்க

அனுமதிக்கப்படுவதில்லை, மேலும் அவர் ஒரு மையவாத தாராளவாதி, வெளிப்படையான தாராளவாதி அல்லது ஒரு நேர்மையான தாராளவாதி என்று ஒருபோதும் அங்கீகரிக்கப்படுவதில்லை. நமது பொதுவெளி உரையாடலில் நடுநிலையைக் கொண்ட ஓர் அளவுகோலே இல்லாதது போன்ற நிலை உள்ளது. “தாராளவாதி” என்ற சொல்லே, இந்தியச் சமூகத்தை இடதுசாரி சித்தாந்தத்தின் ஒரே ஒரு மூலையிலிருந்து மட்டுமே பார்ப்பவர்களின் தனிப்பட்ட உரிமையாக மாறிவிட்டது போலத் தோன்றுகிறது. அதாவது, இடதுசாரி சித்தாந்தத்தின் அந்த ஒரு மூலையிலிருந்து மட்டுமே பார்ப்பது போன்ற நிலை உருவாகியுள்ளது. இதைத்தான் துணைவேந்தர் சந்திஷ்ரீ அவர்கள் அன்றாடம் எதிர்கொண்டு வருகிறார்.

இதுதான் உண்மையான இந்தியத் தாராளவாத விழுமியங்களுக்கும் திணிக்கப்பட்ட தாராளவாதத்திற்கும் இடையிலான பிளவு ஆகும். முதலாவது, பூர்வபக்ஷம் என்ற மரபில் வேரூன்றியுள்ள தொன்மையான விவாதப் பண்பாடாகும். அதாவது, எதிர்தரப்பின் கருத்தை மறுப்பதற்கு முன், அவர்களின் வாதத்தை அதன் மிக வலுவான, மிகத் தெளிவான வடிவில் எடுத்துரைக்க வேண்டும் என்பதே அதன் அடிப்படை விதியாகும். அதுதான் இந்திய மரபு; பூர்வ பக்ஷம் அதைத்தான் குறிப்பிட்டது. இதில் தாங்களாகவே நியமித்துக் கொண்ட அதிகார அமைப்புகள் யார் மேடைக்குள் நுழைய வேண்டும், யார் நுழையக்கூடாது என்பதைத் தீர்மானிக்கின்றன. ஒரு தன்னம்பிக்கை கொண்ட நாகரிகத்திற்கு, அதன் பொது விவாதங்கள் ஓர் திறந்த மேடையைப் போலச் செயல்படுவது அவசியமாகும். அந்த மேடையின் இடதுபுறத்திலும் இடம் இருக்க வேண்டும், வலதுபுறத்திலும் இடம் இருக்க வேண்டும், எல்லாவற்றிற்கும் மேலாக, அதன் மையப்பகுதியிலும் நிச்சயமாக இடம் இருக்க வேண்டும்.

சிந்தனையாளர்கள் இரு தரப்பிலிருந்தும் அந்த மேடைக்குள் நுழையக்கூடியவர்களாக இருக்க வேண்டும். அவர்கள்தான் அந்த மேடையின் கலைஞர்கள். அவர்கள் மேடைக்கு வருவார்கள், உங்களுக்காக அதை நடித்துக் காட்ட மையப்பகுதியில் இருப்பார்கள் எனவே, சிந்தனையாளர்கள் இரு தரப்பிலிருந்தும் நுழைந்து, தங்களது வாதங்களை மையப்பகுதிக்குக் கொண்டுவந்து, கருத்துகளை வெளிப்படையாக திறந்தவெளியில் மோதுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். அதைச் சிந்தித்து ஒரு கருத்தை உருவாக்குவது பார்வையாளர்களின் கைகளில்தான் உள்ளது. நமது நினைவுகள் இதை ஒரு மந்தன் (தீவிரமாக அலசி ஆராய்தல்) அதாவது ஓர் அறிவுசார் 'சமுத்திர மந்தன்' (கடல் கடைதல்) என்று அழைக்கின்றன. தேவர்களும் அசுரர்களும் மந்தர மலையின் இருபுறங்களிலும் தங்கள் நிலையை எடுத்துக்கொண்டதைப் போல, எதிரெதிர் சக்திகளின் உராய்வு மூலம் மட்டுமே உண்மை எனும் அமுதம் வெளிப்பட்டது. அதுவே நமது தத்துவம், அதுவே நமது பாரம்பரியம், அதுவே நமது மரபணுவிலும் உள்ளது.

அந்த நாடகம் ஒருபோதும் முடிவடைவதில்லை; அது பார்வையாளர்களைப் பல கேள்விகளுடனும், சுயமான சிந்தனைக்கான விதைகளுடனும் வீட்டிற்கு அனுப்புகிறது. இரு தரப்பினரும் மாறி மாறித் தங்கள் நிலைப்பாடுகளை வலியுறுத்தி மல்லுக்கட்டுவதைப் பார்வையாளர்கள் காண்கிறார்கள்; அந்த மோதலின் விளைவாக என்ன வெளிப்படுகிறதோ, அது பார்வையாளர்களின் முன் வெளிப்படையாக வைக்கப்படுகிறது. இருப்பினும், பல தசாப்தங்களாக நமது கலாச்சார மற்றும் அறிவுசார் சூழலமைப்பானது மேடையின் ஒரு தரப்புக்குச் சமச்சீரற்ற ஆதிக்கத்தை வழங்கியது. அதேவேளையில், இலக்கியம், கல்வித்துறை, இசை, நாடகம், சினிமா என அனைத்துத் தளங்களிலும் மாற்றுச் சிந்தனை மரபுகள் ஓரங்கட்டப்பட்டன. ஒரு குறிப்பிட்ட சித்தாந்தம் சார்ந்த அந்தத் தரப்பின் ஆதிக்கம் எந்தளவுக்கு இருந்ததென்றால், பைரப்பாவைப் போன்ற ஒரு சிலரைத் தவிர, மற்ற தரப்பை அது முற்றிலுமாகவே அழித்தொழிக்கும் நிலையை எட்டியிருந்தது.

ஒரே ஒரு தரப்பைச் நடிகர்களை மட்டுமே கொண்ட ஒரு மேடை ஒரு நாடகத்தை உருவாக்குவதில்லை; அது ஒரு சித்தாந்த ஒற்றைக் குரல் உரையாகவே அமைந்துவிடும். மறுபக்கம் தொடர்ந்து இயங்குவதை உறுதி செய்வதில்தான் டாக்டர் பைரப்பாவின் அறிவுசார் துணிச்சல் அடங்கியிருந்தது. நிறுவன ரீதியான தேர்வுக்குழுக்கள் எதிர்த்தபோதிலும், தனது இலட்சக்கணக்கான வாசகர்களின் நேரடி ஆதரவுடன், அவர் வெளியிலிருந்து அந்தத் தடையை உடைத்தெறிந்தார். ஆளும் வர்க்கம் நீண்ட காலமாக இல்லவே இல்லை என்று கூறிவந்த, ஒரு துடிப்பான பார்வையாளர் கூட்டம் அந்த இரண்டாவது பக்கத்திற்கு உண்டு என்பதை அவர் நிரூபித்தார். ஆனால், இந்த மறுப்பின் கட்டமைப்பு இதையே நாம் தொடர்ந்து விவாதிக்க வேண்டிய முக்கியமான கருத்தாக நான் முன்வைக்க விரும்புகிறேன்.

இதற்கெல்லாம் மிக நீண்டதொரு பின்னணி உள்ளது. 1947-க்கு முன்பே இந்தியாவின் அறிவுசார் தளத்திலிருந்து குறிப்பிட்ட தரப்பினர் ஓரங்கட்டப்படும் போக்கு தொடங்கிவிட்டது. இதன் தொடக்கம் காலனிய வரலாற்றெழுத்திலேயே இருந்தது. விருது பெற்ற முந்தைய பேச்சாளர், எந்தெந்தக் கட்டங்களில் உண்மைகள் மறுக்கப்பட்டன என்பது குறித்துப் பேசியதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அதை இங்கு குறிப்பிட வேண்டும் என்று நான் முதலில் நினைக்கவில்லை. ஆனால், நாம் இன்று பேசிக்கொண்டிருக்கும் வரலாற்றைப் பார்க்கும்போது இன்றைய விருதுகளில் வங்காளம் ஆதிக்கம் செலுத்துகிறது என்று விக்ரம் சரியாகக் குறிப்பிட்டார். வங்காளம், கிளைவ் நடத்திய பிளாசிப் போரைப் பற்றித்தான் நாம் அதிகமாகக் கேள்விப்படுகிறோம். ஆனால், நாம் படிக்கும் வரலாறு, திப்புவைப் போலவே, தோல்வியடைந்த வங்காள ஆட்சியாளரின் கொடூரத்தைக் குறித்து ஒருபோதும் பேசுவதில்லை.

பிளாசிப் போருக்குப் பிறகு கிளைவ் எங்கு சென்றாலும், அந்தப் பகுதியின் மக்கள் அவரை வரவேற்றனர். ஏனெனில், அவர்கள் ஒரு கொடூரமான ஆட்சியாளரிடமிருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர்! துரதிர்ஷ்டவசமாக, இத்தகைய வரலாற்று உண்மைகள் பெரும்பாலும் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்படுவதில்லை. "ஒரு இந்திய மன்னர், ஒரு தேசியவாத மன்னர், ஆங்கிலேய வணிகர் ஒருவரால் தோற்கடிக்கப்பட்டார்" என்ற செய்தியைத்தான் நீங்கள் பெரும்பாலும் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால், தோற்கடிக்கப்பட்ட அந்த மன்னரின் கொடூரமான செயல்பாடுகள் பற்றி நீங்கள் அறிவதில்லை. இதனால் கிளைவின் செயல்கள் நியாயமானவை என்றோ, அவர் ஒரு நல்லொழுக்கமிக்கவர் என்றோ ஆகிவிடாது. என்றாலும், வரலாறு எவ்வாறு திரித்துச் சொல்லப்பட்டுள்ளது அல்லது மறைக்கப்பட்டுள்ளது என்பதையே இது உணர்த்துகிறது. எனவே, இந்தியக் கல்வி குறித்த குறிப்பில் மெக்காலே இவ்வாறு கூறினார் – நான் அப்படியே மேற்கோள் காட்டுகிறேன் – "அவர்களில் ஒருவரைக்கூட நான் இதுவரை கண்டதில்லை; ஒரு நல்ல ஐரோப்பிய நூலகத்தின் ஒரு அலமாரியில் உள்ள புத்தகங்கள், இந்தியா மற்றும் அரேபியாவின் ஒட்டுமொத்த இலக்கியச் செல்வத்திற்கும் இணையானவை என்பதை மறுக்கக்கூடிய ஒருவரைக் கூட நான் காணவில்லை."

"சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட அனைத்து நூல்களிலிருந்தும் திரட்டப்பட்ட வரலாற்றுத் தகவல்கள் அனைத்தும், இங்கிலாந்தின் தொடக்கப் பள்ளிகளில் பயன்படுத்தப்படும் மிகச் சாதாரணமான சுருக்க நூல்களில் காணப்படுபவற்றை விடக் குறைவான மதிப்பையே கொண்டவை" – இதுதான் அந்த மேற்கோள். இதில் கூறப்பட்டுள்ள முட்டாள்தனத்தின் தீவிரத்தை நாம் நன்கு உணர்ந்திருப்போம் என்று நம்புகிறேன். இது 1835-ஆம் ஆண்டு பிப்ரவரி 2-ஆம் தேதியன்று 'மெக்காலேயின் கல்விசார் ஆவணங்களின் தொகுப்பு' எனும் பிரிவில் பதிவு செய்யப்பட்டது. அந்த அதிகாரப்பூர்வக் குறிப்பை அவர் தொடங்கிய விதத்தைக் கவனியுங்கள்—அதில் வெளிப்படும் முரண்பாடும் ஆணவமும் குறிப்பிடத்தக்கவை. "எனக்குச் சமஸ்கிருதம் அல்லது அரபு மொழி ஆகிய எதைப் பற்றியும் எந்த அறிவும் இல்லை" என்ற வரிகளுடன்தான் அவர் அந்தக் குறிப்பைத் தொடங்கினார்.

ஆனால், அவர் முடிவுக்கு வந்த அந்தத் துணிச்சலைப் பாருங்கள்! அவர் முதலில் தனது அறியாமையை ஒப்புக்கொண்டு, உடனடியாகத் தனது தீர்ப்பை வழங்கினார்; எந்த நிலையிலும் அவர் சான்றுகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. அந்த வரிசையில் வழங்கப்படும் ஒரு தீர்ப்பு, விசாரணை தொடங்குவதற்கு முன்பே வழங்கப்படும் ஒரு தண்டனைக்குச் சமம்; மேலும் அது ஒரு துணைக்கண்டத்தின் கல்விக் கொள்கையாக மாறியது. 1817-இல், ஜேம்ஸ் மில் 'பிரிட்டிஷ் இந்தியாவின் வரலாறு' என்ற நூலை வெளியிட்டார். நம்மை ஆட்சி செய்வதற்காக கிழக்கிந்தியக் கம்பெனி அனுப்பிய வீரர்களுக்குப் பயிற்சி அளித்த ஹெய்லிபரியில் அதுவே செம்மையான பாடநூலாக விளங்கியது. மேலும், இந்த ஜேம்ஸ் மில்லின் 1817-ஆம் ஆண்டு 'பிரிட்டிஷ் இந்தியாவின்

வரலாறு' நூல்,அவர் ஒருபோதும் இந்தியாவுக்குக் காலடி வைத்திராத நிலையிலும், இந்திய மொழிகளில் எதையும் கற்றுக்கொள்ளாத நிலையிலும் எழுதப்பட்டது. மேலும், முறையாகத் தகுதி பெற்ற ஒருவர் இந்தியாவில் தமது கண்களாலும் காதுகளாலும் வாழ்நாள் முழுவதும் அனுபவித்து அறிந்துகொள்வதைவிட, இங்கிலாந்தில் தமது படிப்பறையில் அமர்ந்துகொண்டு ஒரே ஆண்டில் இந்தியாவைப் பற்றி அதிகம் கற்றுக்கொள்ள முடியும் என்ற கருத்தையும் அவர் கொண்டிருந்தார்.

பைரப்பா பல்வேறு இடங்களுக்குச் சென்று, மக்களுடன் வாழ்ந்து, அந்தப் பின்னணியைப் புரிந்துகொண்டு, அதன் பிறகே அந்தப் புத்தகத்தை எழுதினார் என்று நான் கூறியதோடு இதை ஒப்பிட்டுப் பாருங்கள். ஆனால் அவர் ஒரு குறுகிய வட்டத்திற்குள் அடைக்கப்படுகிறார்; இத்தகைய கண்ணோட்டமே நமக்குத் தொடர்ந்து வழங்கப்படுகிறது; நம் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இதுவே போதிக்கப்படுகிறது. அவர்கள் எந்த நாகரிகத்தை அற்பமாகக் கருதினார்களோ, அந்த நாகரிகம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் செம்மையான வரலாற்றுப் பதிவுகளைப் பேணி வந்துள்ளது. கி.பி. 1148 முதல் 1150 வரையிலான காலகட்டத்தில் காஷ்மீரில் வாழ்ந்த கல்ஹணர், ஒரு வரலாற்றாசிரியரின் கடமையை வரையறுப்பதன் மூலம் தனது 'ராஜதரங்கிணி' நூலைத் தொடங்கினார். சமஸ்கிருதத்தில் அவர் என்ன கூறுகிறார்? அதை நான் இவ்வாறு மொழிபெயர்க்கிறேன்: "கடந்த கால நிகழ்வுகளை விவரிக்கும் போது, விருப்பு வெறுப்பின்றி நடுநிலை தவறாமல் நடுவரைப் போல் பேசும் அந்தச் சான்றோர் மட்டுமே போற்றத்தக்கவர்," என்று அவர் கூறுகிறார்.

கி.பி.1148-இல் கல்ஹணரால் எழுதப்பட்ட 'ராஜதரங்கிணி' ஒரு முக்கிய ஆவணமாகும். மறுபுறம்,பிற்காலத்தில் மெக்காலே, தனக்கு சமஸ்கிருதமோ அரபு மொழியோ தெரியாது என்று ஒப்புக்கொண்டபோதிலும், "இருப்பினும் இதைப் பற்றி நான் ஒரு தீர்ப்பை வழங்குகிறேன்" என்று கூறினார். 'ராஜதரங்கிணியில்' வெளிப்படும் அந்த நடுநிலையான அணுகுமுறை–அதாவது மெக்காலே காலத்திற்கு எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட அந்த வரலாற்றுப் பார்வை– எந்தவொரு நவீன வரலாற்றாசிரியரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு சிறந்த முன்மாதிரியாகும். ஆர்.ஜி. பண்டார்கர், கே.பி. ஜெயஸ்வால் மற்றும் ஹேமச்சந்திர ராய்சௌத்ரி போன்ற ஆரம்பகால தேசியவாத அறிஞர்கள் இந்தத் தொன்மையான உள்நாட்டு வரலாற்று ஆவணங்களை மீட்டெடுத்தபோது, இந்தியாவின் ஆழமான வரலாற்று உணர்வை அவர்கள் உலகுக்கு நிரூபித்துக் காட்டினர். இப்போது அந்தப் பணியை ஒரு புதிய தலைமுறையினர் மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் என் கண்முன்னே இருப்பது எனக்கு மெய்சிலிர்க்கிறது. நமது வரலாற்று ஆசிரியர்களும், நமது வரலாற்றுப் பாரம்பரியமும் படிப்படியாகத் தனக்கான இடத்தை அடைந்து வருகின்றன. சுதந்திரத்திற்குப் பிறகு பல தசாப்தங்களாக நாம் தவறவிட்ட ஒன்று இதுவே ஆகும்.

அப்படியானால், 1947-க்குப் பின்னர் என்ன நடந்தது? அதை மறுத்ததற்கான விளைவு என்ன? அரசியல் சுதந்திரம் என்பது அதனுடன் சேர்த்து அறிவுசார் ரீதியிலான காலனித்துவ மனநிலையிலிருந்து விடுதலையையும் கொண்டுவரும் என்று ஒருவர் நியாயமாகவே எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் அது நடக்கவில்லை. எனவேதான், செங்கோட்டையின் முகப்பிலிருந்து மாண்புமிகு பிரதமர், "பஞ்ச் பிரான்" (ஐந்து உறுதிமொழிகள்) குறித்துப் பேசும்போது, "இந்தக் காலனித்துவ மனநிலையிலிருந்து வெளியேறுங்கள்; காலனித்துவத் தன்மை கொண்ட அனைத்திலிருந்தும் விடுபடுங்கள்" என்று கூற வேண்டியிருந்தது. அவர் அதை இப்போதும் சொல்ல வேண்டியுள்ளது. 1960-களின் பிற்பகுதியிலும் 1970-களிலும், மத்தியக் கல்வி அமைச்சகங்களின் ஆதரவின் கீழ், ICHR, NCERT, ICSSR போன்ற முதன்மையான ஆராய்ச்சி நிறுவனங்களும் பல்கலைக்கழகப் பீடங்களும் ஒரு குறிப்பிட்ட வலையமைப்பின் கருத்தியல் கோட்டைகளாக மாறின. அவை மகத்தான அளவில் நிதியுதவியும் ஆதரவும் பெற்றுப் பலப்படுத்தப்பட்டன.

அதன் விளைவாக, அவர்கள் பல விஷயங்களைச் செய்வதில் வெற்றி பெற்றனர். அவை மிகவும் ஆழமாக வேரூன்றியிருப்பதால், இன்றுவரையிலும் அவற்றை அகற்றுவது நமக்குக் கடினமாக உள்ளது; அவை மிகவும் ஆழமாகப் பதிந்துவிட்டன. NCERT பாடநூல்கள் ஒவ்வொரு வரலாற்றுக் காலகட்டத்திலும் வர்க்கப் போராட்டத்தையும் பொருளாதார நிர்ணயவாதத்தையும் நிறுவனமயமாக்கின. ரோமிலா தாப்பரின் 'பண்டைய இந்தியா' (1966), ஆர்.எஸ். சர்மாவின் 'பண்டைய இந்தியா' (1977), சதீஷ் சந்திராவின் 'மத்தியகால இந்தியா' (1978), பிபன் சந்திராவின் 'நவீன இந்தியா' (1971) ஆகியவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். ஆச்சரியப்படத்தக்க வகையில், இவை பல தொகுதிகளாக வெளிவந்ததோடு, பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்குப் பெருமளவில் விநியோகிக்கப்பட்டு கட்டாயப் பாடங்களாகவும் ஆக்கப்பட்டன! வரலாற்றில் இடம்பெற்ற அனைத்தையும் விவரிப்பதற்கான மையப் புள்ளியாக அவை மாறின.விஜயநகரப் பேரரசு, பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், அஹோம் அரசர்கள், மராத்தியர்கள் மற்றும் நமது கடல்சார் பேரரசுகள் ஆகியவற்றின்நாகரிகத் தொடர்ச்சிகள் அடிக்குறிப்புகளாகச் சுருக்கப்பட்டன; அதேவேளையில், படையெடுத்து வெற்றி கொண்டவர்களுக்கு முழுமையான அத்தியாயங்களே ஒதுக்கப்பட்டன.

அதிகாரப்பூர்வமான அந்த நிலைப்பாட்டை எதிர்த்தால் ஏற்படும் விளைவை 1969-லேயே பைரப்பாவே உணர்த்தினார்; அவரைப் பற்றிய காணொளி ஒன்றிலும் இதைக் கண்டோம். தேசிய ஒருமைப்பாட்டின் அடிப்படையில் பள்ளிப் பாடப்புத்தகங்களை மறுஆய்வு செய்வதற்காக, தூதர் ஜி. பார்த்தசாரதி தலைமையில் ஐந்து பேர் கொண்ட தேசியக் குழு ஒன்றை மத்திய அரசு அமைத்தது. காசி விஸ்வநாதர் மற்றும் மதுரா கோயில்கள் இடிக்கப்பட்டது குறித்த வரலாற்றுச் சான்றுகளைப் பாடப்புத்தகங்களிலிருந்து நீக்க அக்குழு முயன்றபோது, டாக்டர் பைரப்பா கொள்கை ரீதியாக அதை எதிர்த்தார். ஒவ்வொரு

ஆண்டும் இலட்சக்கணக்கான பக்தர்கள் காசிக்கும் மதுராவுக்கும் செல்கின்றனர் என்றும், அழிக்கப்பட்ட கோயில்களின் கட்டமைப்புகளின் மீது தற்போது நிற்கும் மசூதிகளை அவர்கள் தங்களுடைய கண்களாலேயே பார்த்துத் தெரிந்துகொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

“வரலாறு உண்மையை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை என்றால், அதற்கு என்ன மதிப்பு இருக்கிறது?” என்று அவர் நேரடியாகக் கேள்வி எழுப்பினார். இதற்கான ஆதாரத்தை, பைரப்பாவின் சொந்த பதிவான விஜய கர்நாடகா, 8 அக்டோபர் 2006 இதழிலிருந்து எடுத்துள்ளேன். தூதரக அதிகாரியான ஜி. பார்த்தசாரதி, தனிப்பட்ட முறையில், பைரப்பா முன்வைத்த எதிர்ப்புகள் கல்வியியல் ரீதியாக நியாயமானவை என்பதை ஒப்புக்கொண்டார். ஆனால், அரசின் கொள்கையின்படி அந்தக் குறிப்புகள் நீக்கப்பட வேண்டியது அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். அதனால்தான், வரலாற்றைத் திரித்து எழுதிய வரலாற்றாசிரியர்களுக்கு வழங்கப்பட்ட ஆதரவு மிகப் பெரியதாகவும், அது அரசிடமிருந்தே வந்ததாகவும் நான் கூறுகிறேன். பைரப்பா தனது நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்க மறுத்துவிட்டார்; ஏறக்குறைய இரண்டு வாரங்களுக்குப் பிறகு, அவர் இடம்பெறாத வகையில் அந்தக் குழு மாற்றியமைக்கப்பட்டது (நாம் பார்த்த அந்த வீடியோவில் இடம்பெற்ற நேர்காணலில் அவர் இதைக் குறிப்பிடுகிறார்). அவருக்குப் பதிலாக, அரசால் அங்கீகரிக்கப்பட்ட வரலாற்றாசிரியரான அர்ஜுன் தேவ் குழுவில் இடம்பெற்றார்.

நினைவுகள் பெரும்பாலும் நேர்மையின்மையின் பெயரால் கையாளப்படுவதில்லை; அவை பெரும்பாலும் விவேகத்தின் பெயராலேயே கையாளப்படுகின்றன. அதனால்தான் அவற்றை எதிர்ப்பது மிகவும் கடினமாக இருக்கிறது. இந்த முரண்பட்ட போக்கு பல மொழிகளிலும் தொடர்ந்தது; தெலுங்கு இலக்கியத்திலும் இது எதிரொலித்தது. ஸ்ரீ ஸ்ரீ (ஸ்ரீரங்கம் ஸ்ரீனிவாச ராவ்) தனது 'மஹா பிரஸ்தானம்' என்றநூலில் புரட்சிகரமான சிந்தனைகளை வெளிப்படுத்தினார். அவர் தெலுங்கில் இவ்வாறு கூறுகிறார்:

"ஈ தேச சரித்ர சூசின ஏமுந்தி கர்வகாரணம்?

நரஜாதி சரித்ர சமஸ்தம் பரபீடன பராயண பாவம்."

“எந்த நாட்டின் வரலாற்றைப் பார்த்தாலும், அதில் பெருமைப்படுவதற்கு என்ன இருக்கிறது? மனித இனத்தின் ஒட்டுமொத்த வரலாறும் பிறரை ஒடுக்குவதிலேயே ஈடுபட்டதாக உள்ளது.” 1950-ஆம் ஆண்டு வெளியான மஹாபிரஸ்தானம் என்னும் நூலில் இடம்பெற்றுள்ள ‘தேச சரித்ரலு’ என்ற தனது கவிதையில் ஸ்ரீ ஸ்ரீ இதைக் கூறுகிறார்.

மற்றொரு புகழ்பெற்ற தெலுங்கு எழுத்தாளரான சலம், மேலும் ஒரு படி சென்று, நிலைபெற்ற குடும்ப மற்றும் சமூகக் கட்டமைப்புகளை நேரடியாகச் சவால் செய்தார்.

மற்றொரு பக்கத்தில், 'கவி சாம்ராட்' விஸ்வநாத சத்யநாராயணா நின்றார் – இவர் பின்னர் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஒதுக்கப்பட்டார் – இந்திய நாகரிகத் தொடர்ச்சியை ஆதரித்துப் பேசினார். "இன்னொரு இராமாயணம் உலகிற்கு ஏன் தேவை?" என்று அவரிடம் கேட்கப்பட்டபோது, அந்தக் கேள்விக்கே சவாலாகப் பதிலளிக்கும் வகையில் அவர் தனது இராமாயண கல்பவிருக்ஷம் நூலைத் தொடங்கினார்: "மறல நிடேலா இராமாயணம்... பன்னச்சோ?" என்றால் "'மீண்டும் ஏன் இராமாயணம்?' என்று நீங்கள் கேட்கிறீர்களா? இதோ, நான் இராமாயண கல்பவிருக்ஷம் படைக்கிறேன். "தெலுங்கில், சிலரை அனுமதிக்கும் விதமும், வேறு சிலரை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் அடைக்கும் விதமும் கொண்ட இந்தக்காவலர்கள் செயல்பட்டனர்.

விஸ்வநாதா 1962-இல் சாகித்ய அகாடமி விருதையும், பின்னர் 1970-இல் ஞானபீட விருதையும் பெற்றார்; ஆனால் ஸ்ரீஸ்ரீக்கு அந்த விருதுகள் கிடைக்கவில்லை. விஸ்வநாதாவுக்கு வாசகர்கள் இருந்தனர்; அவரைப் பின்பற்றுபவர்களும் இருந்தனர்.அவரைப் பொறுத்தவரை வாசகர்களே எல்லாமாக இருந்தனர். ஆனால், நான் உங்கள் முன் முன்வைக்கும் அந்த உருவகத்தின்படி, இலக்கிய அரங்கில் அவருக்குச் சமமான இடம் கிடைத்ததா? கிடைக்கவில்லை. விமர்சகர்களும் இலக்கிய இதழ்களும், பாடத்திட்டங்களும் இலக்கிய வரலாற்றுப் பார்வையும் அனைத்தும் மற்றொரு அணியைச் சுற்றியே கட்டமைக்கப்பட்டிருந்தன. விஸ்வநாதா ஒரு 'திருத்தவாதி', 'மறுமலர்ச்சியாளர்' மற்றும் பழைய செய்யுள் மரபுகளைப் பற்றிக்கொண்டிருப்பவர் என்று முத்திரை குத்தப்பட்டு ஓரங்கட்டப்பட்டார். அவரது புலமை அங்கீகரிக்கப்பட்டாலும், அது ஒருபுறம் ஒதுக்கி வைக்கப்பட்டது. இது கர்நாடகா மற்றும் ஆந்திராவில் மட்டுமே நடந்ததாக நீங்கள் நினைத்தால், தமிழ்நாட்டில் நிலைமை இன்னும் மோசமாக இருந்தது.

நான் சமீபத்திய நிகழ்விலிருந்து தொடங்கி, ஒரு நிமிடம் பின்னோக்கிச் செல்கிறேன். பிப்ரவரி 2009-இல் ஆற்றிய பட்ஜெட் உரையில், அமைச்சர் ஒருவர்–பேராசிரியர் அனகரன் என்று நினைக்கிறேன்– 28 எழுத்தாளர்களின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் மீட்டெடுப்பதாகக் குறிப்பிட்டார். 2009 பிப்ரவரி பட்ஜெட் உரை: "நாங்கள் 28 எழுத்தாளர்களின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் மீட்டெடுக்கிறோம்." அப்படியென்றால், அந்த 28 எழுத்தாளர்கள் யார்? நான் அவர்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறேன்; ஆனால் அதற்கு முன் ஒன்றைச் சொல்ல வேண்டும்–இவர்கள் 1949-இலிருந்தோ அல்லது அதற்குச் சற்று முன்னதாகவோ (1949-இல்தான் திமுக ஒரு கட்சியாக உருவானது; அதற்கு முன்பே திராவிடர் கழகம் என்ற பெயரில் திராவிட இயக்கம் தொடங்கப்பட்டிருந்தது; அது ஒரு அரசியல் கட்சியை விட சமூக-கலாச்சார அமைப்பாகவே இருந்தது) செயல்பட்டு வந்த எழுத்தாளர்கள் ஆவர்.

அப்போதிலிருந்து, தேசியவாதம் அல்லது இந்து மதம் சார்ந்த கூறுகள் (ராமாயணம், மகாபாரதம் போன்றவை) தங்கள் எழுத்துகளில் இடம்பெற்றிருந்த எழுத்தாளர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் அடைக்கப்பட்டனர்; அவர்கள் புறக்கணிக்கப்பட்டனர்; ஏன், துன்புறுத்தப்பட்டனர் மற்றும் பொதுவெளியில் அவமானப்படுத்தப்பட்டனர். இத்தகைய சூழலுக்குப் பல எழுத்தாளர்கள் ஆளானார்கள். இந்த இயக்கம் மிகவும் தீவிரமானதாக இருந்தது. மேலும், இதற்கு அரசு ஆதரவும் இருந்தது. தமிழ்நாட்டில் இந்திய தேசிய காங்கிரஸ் தோல்வியடைந்த பிறகு, ஆட்சிக்கு வந்த கட்சிகள் எப்போதும் திராவிடக் கொள்கையின் தாக்கத்திற்கு உட்பட்டே இருந்தன. இந்தத் திராவிடக் கொள்கையானது தேசியவாதம், சமஸ்கிருதம் மற்றும் இந்து சிந்தனைகளின் தாக்கம் கொண்ட எதற்கும் எதிரானதாக இருந்தது.

இதற்கு ஒரு எளிய உதாரணம்: கம்பன் எழுதிய 'கம்பராமாயணம்' தமிழில் உள்ள ராமாயணத்தின் மிகச்சிறந்த வடிவமாகும். இது வால்மீகி ராமாயணத்தின் நேரடி மொழிபெயர்ப்பு அல்ல; இதில் பல தமிழ் சிந்தனைகளும் கலந்துள்ளன—கடற்கரை மற்றும் மலைப்பகுதி சார்ந்த வாழ்க்கை முறைகள் என அனைத்தும் கம்பனின் ராமாயணத்தில் இணைக்கப்பட்டுள்ளன. இந்த நூல் திராவிட இயக்கத்தால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. நான் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை, ஆனால் மிக முக்கியமான ஒரு தமிழ் அரசியல் தலைவர், ராமாயணத்தில் உள்ள 'சிருங்கார ரசம்' (காதல் அல்லது இன்பம் சார்ந்த உணர்வு) தொடர்பான சில பகுதிகளை மிகவும் தரக்குறைவாக விமர்சித்து எழுதினார். ராமாயணம் ஒரு ஆபாசமான படைப்பு என்பது போன்ற தோற்றத்தை உருவாக்கும் வகையிலேயே அந்த எழுத்து அமைந்திருந்தது. அந்த அளவிற்கு அவர்கள் ராமாயணத்தை இழிவுபடுத்தினர்.

அப்போது மிகுந்த தேசபக்தி கொண்ட ஒரு தமிழர் இருந்தார். "இல்லை, இதை நான் ஏற்கமாட்டேன். ராமன் என் நாயகன், ராமன் என் தெய்வம்; என் குழந்தைகளும் வருங்கால சந்ததியினரும் தெரிந்துகொள்ள வேண்டிய பல நல்ல விஷயங்களை ராமாயணம் எனக்குக் கற்றுத்தருகிறது" என்று அவர் கூறினார். இந்து மதம், தேசியம், சமஸ்கிருதம் அல்லது இந்து சிந்தனை சார்ந்த எதையும் எதிர்த்த அன்றைய ஆளும் வர்க்கத்திற்கு எதிராக ஒரு எதிர்ப்பு நடவடிக்கையாக அவர் தமிழ்நாடு முழுவதும் 'கம்பர் கழகத்தை' நிறுவினார். இன்றும் கூட, கம்ப ராமாயணத்தைப் பரப்புவதில் அந்தக் கம்பர் கழகம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

அதேபோல, 'ரசிகமணி' டி.கே. சிதம்பரநாத முதலியார் என்ற மற்றொரு எழுத்தாளரும் இருந்தார். அவரும் ராமாயணத்தில் சிறந்த புலமை பெற்றவர். 'கம்பன் தரும் ராமாயணம்' என்ற நூலை அவர் எழுதினார். இதற்காக அவர் ஒதுக்கி வைக்கப்பட்டார்; "இதை நீங்கள் எப்படிச் செய்யலாம்?" என்று அவர் கேள்விக்குள்ளாக்கப்பட்டார். இதுபோலப் பலர்

இருந்தனர்; வையாபுரிப் பிள்ளை ஒரு சிறந்த அறிஞராகவும் இலக்கிய விமர்சகராகவும் திகழ்ந்தவர், அவரும் ஒதுக்கி வைக்கப்பட்டார். எனவே, பிப்ரவரி 2009-இல் "நாங்கள் கௌரவத்தையும் கண்ணியத்தையும் மீட்டெடுக்கிறோம்" என்று தமிழக நிதியமைச்சர் குறிப்பிட்ட அந்த 28 பேரும், தேசியவாதிகளாக இருந்ததற்காகவும், இந்தியா மற்றும் இந்தியாவின் தொன்மையான கலாச்சாரம் குறித்துச் சிந்தித்ததற்காகவும் ஒதுக்கி வைக்கப்பட்டவர்களே ஆவர்.

திராவிட இயக்கத்தின் ஒரு பகுதியாக இருந்த ஒரு கட்சியே ஆட்சிக்கு வந்து, பட்ஜெட் உரையில் "அவர்களின் கௌரவத்தை மீட்டெடுக்க விரும்புகிறேன்; அவர்கள் வாழ்நாளில் வெளியிட்ட புத்தகங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மதிப்பிடப்படும் தொகைக்கு ஈடான பணத்தை நாங்கள் வழங்குவோம்" என்று கூற வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த கௌரவ மீட்பு நடவடிக்கை நடந்தபோது அவர்களில் சிலர் உயிருடன் கூட இல்லை; மேலும், தங்கள் புத்தகங்கள் அரசுடைமையாக்கப்பட்டதை எதிர்த்து அவர்களில் சிலர் போராடியும் இருந்தனர். திராவிடக் கலாச்சாரத்தால் நிராகரிக்கப்பட்ட தங்கள் தாத்தா அல்லது தந்தை எழுதிய படைப்புகளை, அந்தத் தொல்லைகளுக்கு மத்தியிலும் பல தசாப்தங்களாகத் தங்கள் சொந்தச் சிறிய பதிப்பகங்கள் மூலம் வெளியிட்ட குடும்பங்கள் அவை. அவர்கள், "நாங்களே அவற்றை வெளியிடுகிறோம், நீங்கள் வந்து எங்களுக்கு எதுவும் சொல்லத் தேவையில்லை. நாங்கள் 200 அல்லது 500 பிரதிகளை வெளியிடலாம்; ஆனால் அவற்றை அரசுடைமையாக்க உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? இத்தனை காலமும் அவற்றை அவமதித்தது நீங்கள்தானே?" என்று கூறினர்.

ஆனால் பரவாயில்லை; அந்த நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டன. ஆனால், நமது சுதந்திர இந்தியாவின் கருத்தியல் வாயிற்காவலர்களுக்கு எதிரான சிந்தனைக் கோடுகளைப் பின்பற்றியவர்களை எவ்வாறு ஒரு குறிப்பிட்ட வரம்புக்குள் அடைத்து ஒதுக்கினார்கள் என்பதற்கான வரலாறு இதுதான். இவர்கள் இந்தியக் கலாச்சாரம் குறித்துப் பெருமையுடன் எழுதியவர்கள். அந்த 28 பேருக்கும் 2009-இல் நடந்த பட்ஜெட் உரையின் மூலம் கௌரவம் மீட்டளிக்கப்பட வேண்டியிருந்தது. கருத்துலகைக் கட்டுப்படுத்தும் இந்த அமைப்பிற்குப் பெரும் ஆதரவு இருந்தது. 'சோவியத் லேண்ட் பப்ளிகேஷன்ஸ்' வெளியீடுகளால் ஈர்க்கப்படாதவர்கள் நம்மில் எத்தனை பேர் இருப்போம் என்று சொல்லுங்கள்? எவ்வளவு அற்புதமான புத்தகங்கள்! எவ்வளவு அழகான புத்தகங்களை அவர்கள் வெளியிட்டார்கள் - ஆனால் அவை பிரச்சாரப் பொருட்கள்! அதிலிருந்து புஷ்கினைப் பற்றி அறிந்துகொண்டதன் மூலம் நான் பயனடைந்தேன். எவ்வளவு அழகான ஓவியங்கள்! ஆனால் கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல் தான் அதற்கெல்லாம் நிதியளித்தது.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு வீட்டிலும் வியட்நாம் போர் குறித்த புத்தகங்கள் இருந்தன. ஆனால், அமெரிக்காவிலிருந்து கோதுமையை இறக்குமதி செய்ய வேண்டிய சூழலுக்கு

நாம் ஏன் தள்ளப்பட்டோம் என்பதை விளக்கும் புத்தகங்கள் எதுவும் இருக்கவில்லை; அதைச் சொல்லும் புத்தகங்களே இல்லை! 'ஏன் இந்த வியட்நாம் போர்?' என்ற தலைப்பிலான புத்தகங்களை நான் படித்திருக்கிறேன். ஆனால், இத்தகைய வெளியீடுகளுக்கும், அந்தச் சிறந்த கலாச்சார மையங்களுக்கும் ஆதரவளித்த அந்த நிதி ஆதாரம்... அதுபற்றி சாந்திஸ்ரீயால் இன்னும் விரிவாகச் சொல்ல முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இந்த அற்புதமான வெளியீடுகள் மூலம் மக்களின் மனங்களில் ஊடுருவ மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் ஏறக்குறைய கி.பி. 2000-ஆம் ஆண்டு வரை தொடர்ந்தன என்று நான் கருதுகிறேன். அதற்குப் பிறகு, இயல்பாகவே, விக்ரம் சம்பத் போன்ற பலர் தங்கள் சொந்த முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இது உலகளாவிய ஒரு போக்கு. கேரளாவைப் பற்றிப் பேச நான் விடுபட்டுவிட்டேன்–கேரளாவில் 'பிரபாத் புக் ஹவுஸ்' 28 கிளைகளை நடத்தி, நடமாடும் வாகனங்கள் மூலம் கிராமங்களுக்குப் புத்தகங்களை விநியோகித்தது; அவை அனைத்தும் பிரச்சாரப் பொருட்களாகவே இருந்தன. பால் சகாரியா போன்ற எழுத்தாளர்கள் கூட, "எனக்கு 12 வயதாக இருந்தபோதே நான் தீவிர கம்யூனிஸ்டாக மாறிவிட்டேன்" என்று ஒருமுறை குறிப்பிட்டிருக்கிறார். இது குழந்தைகளின் மனங்களில் ஏற்படுத்திய தாக்கத்தை எண்ணிப் பாருங்கள்! கம்பனை உயிர்ப்புடன் வைத்திருக்க தமிழ்நாட்டில் சா. கணேசன் தொடங்கிய 'கம்பர் கழகம்' பற்றி நான் உங்களிடம் பேசினேன். ஆனால் 2013-ஆம் ஆண்டில் கூட–உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும் என்று தெரியவில்லை–தமிழ்நாட்டின் தெற்குப் பகுதியைச் சேர்ந்த மீனவ சமூகத்தைச் சேர்ந்த ஜோ டி'குரூஸ், 'ஆழி சூழ் உலகு' (கடலால் சூழப்பட்ட உலகம்) என்ற புத்தகத்தை எழுதினார்.

சாகித்ய அகாதெமி அவருக்கு விருது வழங்குவதாக அறிவித்தது. ஆனால், அவர் அந்த விருதைப் பெறுவதற்கு முன்பே, பதிப்பாளர், “இல்லை, இல்லை, உங்கள் நூலை நாங்கள் வெளியிட மாட்டோம். மன்னிக்கவும்” என்று கூறினார். இதனால் மிகப்பெரிய சர்ச்சை ஏற்பட்டது. ஏன் அப்படிச் சொன்னார்கள்? குஜராத் முதலமைச்சரின் சிறந்த நிர்வாகம், அங்கு வரும் தொழில்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் புரிதல் ஆகியவற்றைப் பாராட்டி அவர் பேசியிருந்தார். அவரே ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் பணியாற்றியவர் என்றாலும், தான் சார்ந்த மீனவ சமூகம் மற்றும் கடற்கரைப் பகுதி குறித்து ஒரு அற்புதமான புத்தகத்தை எழுதியிருந்தார். ஆனால் பதிப்பாளர்கள் அவரது புத்தகத்தை வெளியிட மறுத்துவிட்டனர்! "வேண்டாம், வேண்டாம், முதலமைச்சரை எப்படி அப்படிப் பாராட்டலாம்?" என்று அவர்கள் கூறினர். இத்தகைய போக்கு 2013-இல் கூடத் தொடர்ந்தது.

சோவியத் காலத்தில், ஆகஸ்ட் 1934-இல் ஆண்ட்ரெய் ஷ்தானோவ் இவ்வாறு கூறினார்: "ஆம், சோவியத் இலக்கியம் ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டத்தைக் கொண்டதாகவே இருக்கும்; ஏனெனில் வர்க்கப் போராட்டக் காலத்தில், வர்க்கச் சார்பு இல்லாத இலக்கியம்

என்பது இருக்க முடியாது, இருக்கவும் கூடாது. எனவே நாங்கள் அதை வெளியிடுவோம்." இது ஒரு வெளிப்படையான அறிவிப்பாக இருந்தது. அந்த வெளியீட்டு முயற்சி 'சோவியத் லேண்ட்' இதழுடன் நின்றுவிடவில்லை; அது உலகம் முழுவதும் பரவியது. ஒரு கட்டத்தில், புகழ்பெற்ற இசைக்கலைஞர் சாய்கோவ்ஸ்கி கூட முத்திரை குத்தப்பட்டு ஒதுக்கப்பட்டார்; பின்னர் பலவிதமான மாற்றங்கள் மற்றும் பிம்பச் சீரமைப்புக்குப் பிறகே அவர் உண்மையான ரஷ்ய மேதையாக ஏற்றுக்கொள்ளப்பட்டார். முதலில் அவர் முத்திரை குத்தப்பட்டு ஒதுக்கப்பட்டார், ஆனால் பல முயற்சிகளுக்குப் பிறகு மீண்டும் அங்கீகரிக்கப்பட்டார்.

பிரிட்டனிலும் இதே நிலைதான் இருந்தது. சமீப காலம் வரையிலும்ரோஜர் ஸ்க்ரூட்டன்இதைப் பற்றி பேசியிருப்பதை நீங்கள் கேட்டிருக்கலாம். 1979 ஆம் ஆண்டு அவர் எழுதிய'தி மீனிங் ஆஃப் கன்சர்வேடிசம்' என்ற நூலின் வெளியீடு, அவருடைய எஞ்சியிருந்த கல்வியியல் பணிவாழ்க்கையையே நடைமுறையில் பெரிதும் பாதித்துவிட்டதாக அவர் விவரித்துள்ளார். 1979 ஆம் ஆண்டில்கூட, பிரிட்டனில் வலதுசாரி கண்ணோட்டத்தில் எழுதுபவர் ஒருவர், 'தி மீனிங் ஆஃப் கன்சர்வேடிசம்' போன்ற ஒரு புத்தகத்தை எழுதியதற்காகவே தனது தொழில்முறை வாழ்க்கையை இழக்க நேரிட்டது. தனது கேம்பிரிட்ஜ் கல்லூரி நூலகத்தில் மார்க்ஸ், லெனின் மற்றும் மாவோ ஆகியோரின் நூல்கள் இருந்தன; ஆனால் ஸ்ட்ராஸ், வோகெலின், ஹாயெக் அல்லது ஃப்ரீட்மேன் ஆகியோரின் நூல்கள் எதுவும் இல்லை என்பதை அவர் சுட்டிக்காட்டினார். 2003 ஆம் ஆண்டு அவர் இதைச் சுட்டிக்காட்டினார். அவர் ஒரு கேள்வியையும் எழுப்பினார்: கல்வி அமைப்பில் வலதுசாரிகள் ஏன் ஓரங்கட்டப்படுகிறார்கள், ஊடகங்களால் ஏன் கண்டிக்கப்படுகிறார்கள், மற்றும் அரசியல் வர்க்கத்தினரால் ஏன் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படுகிறார்கள்?

இதை அவர் தனது 'ஃபூல்ஸ், ஃப்ராட்ஸ் அண்ட் ஃபயர்பிராண்ட்ஸ்' என்ற புத்தகத்தில் குறிப்பிடுகிறார். எனவே, ஐக்கிய ராஜ்ஜியம் போன்ற நாட்டில்கூட இத்தகைய துன்புறுத்தல்கள் இருந்தன. இதன் விளைவாக உருவான ஒருமித்த கருத்தை மார்கரெட் தாட்சர் இவ்வாறு வரையறுத்தார் - நான் அப்படியே மேற்கோள் காட்டுகிறேன் - "யாரும் நம்பாத, ஆனால் யாரும் எதிர்க்காத ஒன்றைத்தேடி, அனைத்து நம்பிக்கைகள், கொள்கைகள், விழுமியங்கள் மற்றும் திட்டங்களைக் கைவிடும் செயல்முறை" - இதை இவ்வளவு அழகாகச் சுருக்கிக் கூறியது மார்கரெட் தாட்சரின் வழக்கமான பாணிக்கே உரியது. அந்தக் கருத்தை மீண்டும் நினைவுகூர்வது பயனுள்ளதாக இருக்கும்: “யாரும் நம்பாத, ஆனால் யாரும் எதிர்க்காத ஒன்றைத் தேடும் பொருட்டு, அனைத்து நம்பிக்கைகள், கொள்கைகள், மதிப்புகள் மற்றும் கொள்கை நிலைப்பாடுகளையும் கைவிடும் செயல்முறை.”

எனவே, இன்று, எதிர்ப்புக் குரல்கள் உரக்கத் தெளிவாக வெளிப்படுவதை நாம் காண்கிறோம். இங்குள்ள சிந்தனையாளர்களிடம் துல்லியமாக இதுதான் கோரப்பட்டது: ஒரு செயற்கையான அரசியல் ஒருமித்த கருத்துக்கு அடிபணிய வேண்டும் அல்லது நிறுவன ரீதியான அழிவை எதிர்கொள்ள வேண்டும். பல தசாப்தங்களாக இதை நாம் கண்டோம். இந்தக் கருத்தியல் வாயிற்காவல் இன்றும் தொடர்கிறது.. நான் சொல்லத் தேவையில்லை, இதோ பாருங்கள்: டாக்டர் விக்ரம் சம்பத், வரலாற்றில் முனைவர் பட்டம் பெற்றிருந்தும், ராயல் ஹிஸ்டாரிக்கல் சொசைட்டியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக இருந்தும், ஆயிரக்கணக்கான முதன்மை ஆவணங்களையும் நூற்றுக்கணக்கான தனியார் ஆவணத் தொகுப்புகளையும் அடிப்படையாகக் கொண்டு பல தொகுதிகளாக ஆய்வு நூல்களை எழுதியிருந்தபோதிலும், அவரது ஆய்வு முடிவுகள் ஏற்கனவே நிலைநிறுத்தப்பட்ட கருத்துகளுடன் ஒத்துப்போகவில்லை என்பதற்காக, அவரை ஒரு வரலாற்றாசிரியரல்லர், பிரபலமான எழுத்தாளர், மற்றும் ஒரு பயில்நிலையாளர் என்று நிராகரிக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தக் கருத்தியல் வாயிற்காவலர்கள் தெரிவிக்கும் செய்தி இதைவிடத் தெளிவாக இருக்க முடியாது:உங்கள் முனைவர் பட்டம் எதுவாக இருந்தாலும், உங்கள் மேற்கோள்கள் எதுவாக இருந்தாலும், அவர்களின் உறுப்பினர் அட்டை இல்லாமல், நீங்கள் மேடை ஏற முடியாது. அதே வாயிற்காவலர்கள்தான் பல்கலைக்கழகங்களில் பேராசிரியர் பதவிகளை வகிக்கிறார்கள்; ஒரு குழந்தை எதைப் படிக்க வேண்டும், எதைப் படிக்கக் கூடாது என்பதைத் தீர்மானிக்கும் குழுக்களிலும் இடம்பெறுகிறார்கள். எந்த ஆராய்ச்சிக்கு நிதியுதவி வழங்கப்பட வேண்டும், எந்த ஆய்வுக்கு அமைதியாக நிதியுதவி மறுக்கப்பட வேண்டும் என்பதையும் அவர்களே தீர்மானிக்கிறார்கள். அவர்கள், தாங்கள் ஏற்கெனவே மதிப்பிட்ட ஒரு நாட்டைப் பற்றி வெளிநாட்டுச் செய்தித்தாள்களில் எழுதுகிறார்கள். மேலும், நான் இவ்வளவு நேரமாக விவரித்துக் கொண்டிருக்கும் அந்த இயந்திர அமைப்பின் வாரிசுகளாகவே அவர்கள் இருக்கிறார்கள். கோமின்டர்ன் மறைந்துவிட்டது, கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனலும் மறைந்துவிட்டது; ஆனால் அது நம்மிடம் விட்டுச் சென்ற பழக்கம் மட்டும் இன்னும் இருக்கிறது. அந்தப் பழக்கம் என்னவென்றால், ஆதாரங்கள் என்ன சொல்ல அனுமதிக்கப்படும் என்பதை முன்கூட்டியே தீர்மானித்துவிட்டு, பின்னர் அந்தச் ஆதாரங்களை வேறுவிதமாகப் படிப்பவர் எவரையும் ஒரு எதிராளியாகக் கருதாமல், ஒரு பகைவனாகக் கருதுவதே ஆகும்.

இது விசாரணைக்கு முன்பே தீர்ப்பை முடிவு செய்வதற்கு ஒப்பானதாகும். எனவே, இறுதியாக நான் என்ன கோருகிறேன்? மேடையின் ஒரு தரப்பை மௌனமாக்கவோ அல்லது ஏகபோக அதிகாரத்தை ஒரு தரப்பிலிருந்து மற்றொரு தரப்பிற்கு மாற்றவோ நாங்கள் விரும்பவில்லை. ஏகபோக அதிகாரம் அப்படியே நீடிக்கும் நிலையில் அதில் ஈடுபடும் நபர்கள் மட்டும் மாறினால், எதற்கும் விடுதலை கிடைக்காது; நிர்வாகம் மட்டுமே

மாறும். 'கட்டஷ்ரத்தா' போன்ற மாற்றுப் பாணியிலான ஒரு திரைப்படம் – இதைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் – உருவாக்கப்பட்டபோது, இந்தியா அதைப் பார்த்தது. இந்தியாவில் சிலர் அதை பாராட்டினர், இன்னும் சிலர் அதைக் கொண்டாடினர். அந்தப் பரஸ்பர மனப்பான்மை இரு தரப்பிலும் இருக்க வேண்டும்.

அந்தப் பரஸ்பர மனப்பான்மை இரு தரப்பிலும் இருக்க வேண்டும். முழு மேடையும் மீட்டெடுக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம்: இடதுபுறம் ஒரு இடம், வலதுபுறம் ஒரு இடம், மற்றும் பல்வேறு சிந்தனைப் போக்குகளைச் சேர்ந்தவர்கள் ஒன்றுகூடி உரையாடக்கூடிய ஒரு திறந்தவெளி மையம் ஆகியவை அமைய வேண்டும். ஆதாரங்களைத் தாங்களாகவே சீர்தூக்கிப் பார்த்து மதிப்பிடும் திறன் கொண்ட ஒரு விவேகமுள்ள பொதுமக்களின் முன் கருத்துகள் மோதட்டும்.. இன்றைய இந்தியா தன்னம்பிக்கை மிக்கதாகவும், அதை வெளிப்படுத்துவதில் எவ்விதத் தயக்கமும் அற்றதாகவும் உள்ளது; நமது சொந்தப் பாரம்பரியத்தைப் பற்றி அறிந்துகொள்ள யாருடைய அனுமதிக்காகவும் காத்திருக்கும் நிலையை நாம் கடந்துவிட்டோம். நாம் நமது கல்வெட்டுகளை மீண்டும் வாசிக்கிறோம், கடல்சார் வர்த்தக வரலாற்றை ஆராய்கிறோம், நமது கணித மரபிற்குத் திரும்புகிறோம்; மேலும் இக்கதைகளை உண்மையான மகிழ்ச்சியோடும் துல்லியத்தோடும் எடுத்துரைக்கிறோம். காலனித்துவ மனப்பான்மையிலிருந்து விடுபடுதல் என்பது இதுதான் என்று நான் கருதுகிறேன்.

இது வெறும் ஒரு பாடப்புத்தகத்திற்குப் பதிலாக வேறொன்றை மாற்றிக்கொள்வது போன்ற சாதாரண விஷயமாக இருக்க முடியாது. இது பரந்த அளவிலான ஆவணங்கள், அதிகமான மொழிகள், சவாலான கேள்விகள் மற்றும் பரவலாக வாசிக்கப்படும் அறிஞர்களின் ஒரு பெரிய வட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, சான்றுகள் எதைச் சொல்ல வேண்டும் என்பதை எந்தவொரு அதிகார அமைப்பும் முன்கூட்டியே தீர்மானிக்க முடியாது என்ற நிலையை இது உறுதிப்படுத்த வேண்டும். வரலாற்றாசிரியர்கள், நாவலாசிரியர்கள், ஓவியர்கள் மற்றும் கதைசொல்லிகள் எனப் பல்வேறு குரல்களை இன்று கௌரவிப்பதன் நோக்கமும் இதுவேயாகும். இவர்கள் அனைவரும் மேடைக்கு வரும் புதிய குரல்கள். டாக்டர் பைரப்பா தனது 95-வது வயதில் நம்மை விட்டுப் பிரிந்தார். அவர் குறைகளற்றவர் அல்ல; அப்படிக் கூறுவது அவருக்கு நாம் செலுத்தும் மரியாதையும் அல்ல. இருப்பினும், அவர் ஆழ்ந்த நேர்மை கொண்டவராக இருந்தார்; அந்த நேர்மைக்காகத் தனது தொழில் வாழ்க்கையில் பெரும் விலையையும் கொடுத்தார். அவர் தனது பணியை எளிமையாக இப்படிச் சுருக்கிக் கூறினார்: "மனித உணர்வுகளைச் செம்மைப்படுத்துவதே இலக்கியத்தின் பணி." அவர் ஒருபோதும் தன்னைச் சுற்றி ஒரு பெரும் ஆதரவாளர் கூட்டத்தைத் திரட்ட முயலவில்லை; மாறாக, மனிதர்கள் உண்மையை அணுகும் விதத்தைச் செம்மைப்படுத்தவே முயன்றார்: 'சத்யா மற்றும் சௌந்தர்யா' – அதாவது உண்மை மற்றும் அழகு. நம்மைப் போன்ற தொன்மையான

நாகரிகத்திற்கு, இது உண்மையில் அறிவுசார் சுயராஜ்ஜியத்தை நிலைநாட்டும் ஒரு செயலாகும். ஆம், ப்ரசென்ஜித், நீங்கள் சொன்னது சரிதான்; 1991-இல் நமக்குப் பொருளாதார சுதந்திரம் கிடைத்தது, ஆனால் அறிவுசார் சுதந்திரம் இப்போதுதான் வலுப்பெற்று வருகிறது என்று நான் கருதுகிறேன். எனவே, அறிவுசார் சுதந்திரம் என்பது நம்மை நாமே அறிந்துகொள்வதற்கான உரிமையை நமக்கு வழங்க வேண்டும். இன்று, செப்டம்பர் 5-ஆம் தேதியன்று, நம் ஆசிரியர்களுக்கும் டாக்டர் பைரப்பா போன்ற சிந்தனையாளர்களுக்கும் நாம் செலுத்தும் மிகச்சிறந்த மரியாதை என்னவென்றால், இந்தியாவின் அறிவுசார் மேடையின் இரு பக்கங்களையும் பிரகாசமாக ஒளிரச் செய்து, அந்தச் செயல்பாடு தொடர்ந்து நடைபெறுவதை உறுதி செய்வதே ஆகும். இந்தச் சிந்தனை மந்தனம் (தீவிரமாக அலசி ஆராய்தல்) தொடரட்டும்; ஆதாரங்களும், ஆய்வின் கடுமையான நெறிமுறையும், மனச்சாட்சியும் இறுதித் தீர்ப்பை வழங்கட்டும்.மேலும், அறிவுசார் சுயராஜ்யத்தின் இந்தப் பொற்காலத்தை நோக்கி இந்தியாவை நாம் அனைவரும் இணைந்து முன்னெடுத்துச் செல்வோம்.

மிக்க நன்றி.